அத்துமீறும் தேர்தல் ஆணையம்:

அதிகாரிகளை மாற்றலாம் - வாக்காளர்களை மாற்ற முடியுமா?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!

சென்னை, ஏப். 23- அதிகாரிகளை மாற்றலாம் - வாக்காளர்களை மாற்ற முடியுமா? என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் கேள்வியெழுப்பி அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெறும் அய்ந்து மாநிலங்களில் தமிழ் நாடு, மேற்கு வங்கம் ஆகிய இரு மாநிலங்கள் மீது ஒன்றிய ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசு குறி வைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நடு நிலைமைக்குப் 'பேர் போன' தேர்தல் ஆணையமோ, இந்த இரு மாநிலங்களில் மட்டும் தொடர்ந்து அதிகாரிகளை மாற்றிக் கொண்டே இருக்கிறது. முதலில் மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப் பாளர் என்று தொடங்கி, டி.அய்.ஜி, ஏ.டி.ஜி.பி, என்று வரிசையாக மேலேறி, டி.ஜி.பி., உள்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர் என்று மாற்றிக் கொண்டே இருந்தார்கள். இதில் தி.மு.க. சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப் பட்ட பா.ஜ.க.வுக்குச் சார்பான காவல்துறை அதிகாரியின் நியமனம் திரும்பப் பெறப்பட்டது.

இந்த இந்த அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்று எங்கிருந்தெல்லாம் ஆணை வருகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான்! பார்ப்பன 'இனமலர்' பத்திரிகையொன்று ஒரு காவல்துறை அதிகாரியை மாற்றவில்லையே என்று எழுதுகிறது மறுநாளே அவர் மாற்றப்படுகிறார்.

முதலமைச்சரின் தனிச் செயலர் உமாநாத் அய்.ஏ.எஸ். போன்ற துடிப்புமிக்கவர்கள் மீது தேர்தல் விதிமீறல் என்று குற்றம் சாட்டினார்கள். அவ்வழக்கு இன்று (22.4.2026) உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அதிகார அத்துமீறல் இல்லையா?

தலைமைச் செயலாளரை மாற்றுவதற்கெல்லாம் அதிகாரமே இல்லாத தேர்தல் ஆணையம், அதிகாரிகளை மாற்றுவதை நிறுத்தவில்லை. இது அதிகார அத்துமீறல் இல்லையா?

நாம் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டங்களில் குறிப்பிட்டதை இங்கும் நினைவுகூர விரும்புகிறோம்.

தேர்தல் ஆணையம் அதிகாரிகளை மாற்றலாம். வாக்காளர்களை மாற்ற முடியுமா? குஜராத்திலிருந்தும், பீகாரிலிருந்தும் வாக்காளர்களைக் கொண்டு வந்து இறக்குவார்களா?

அரசு இயந்திரத்தை இன்னலுக்கு உள்ளாக்குவோர் யார்?

அதிகார வரம்புகளை மீறுவோர் யார்? அரசு இயந்திரத்தை இன்னலுக்கு உள்ளாக்குவோர் யார்? என்பதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

அனைத்துக்கும் சேர்த்துத் தான் தீர்ப்பளிப் பார்கள், காத்திருப்போம்!

கிராம ஊராட்சிகளில் 100 நாள் வேலைத்திட்டத்தை முடக்க நினைக்கும்

பா.ஜ.க. விற்கும், துணை போகும் அ.தி.மு.க. கூட்டணிக்கும் தக்க பாடம் புகட்ட வேண்டும்!

அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள்!

திண்டுக்கல், ஏப்.23 - திண்டுக்கல் நகருக்கு வைகை அணையிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வரப்படும் என்று திண்டுக்கல் ஒன்றியம் பாடியூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் ஐ. பெரியசாமி பேசி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். கிராம ஊராட்சிகளில் 100 நாள் வேலைத்திட்டத்தை முடக்க நினைக்கும் பா.ஜ.க.விற்கும், துணை போகும் அ.தி.மு.க. கூட்டணிக்கும் தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்தார்.

திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி. செந்தில்குமாரை ஆதரித்து தி.மு.க. மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி திண்டுக்கல் தொகுதிக்குட்பட்ட பாடியூர், பாறையூர், பெரியகோட்டை, பாலகிருஷ்ணாபுரம், மாலைப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு சென்று, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். பாடியூரில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ. பெரியசாமி, திண்டுக்கல் நகருக்கு காவிரி கூட்டுக்குடி நீர் தந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்றார். திண்டுக்கல் மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சியின்போது வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகையை திண்டுக்கல் மாவட்டத்திற்கு மட்டும் சுமார் 20 ஆயிரம் பேருக்கு 10 வருடங்களாக அ.தி.மு.க. அரசு நிறுத்தி வைத்தது. மீண்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுபோல 100 நாள் வேலைத்திட்டத்தையும், மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு நிறுத்தப் பார்க்கிறது. ஆனால், தமிழக முதல்வர் மத்திய அரசே நிறுத்தினாலும், தமிழகத்தில் தொடர்ந்து 100 நாள் வேலைத்திட்டம் நடைபெற நடவடிக்கை எடுப்பார் என்றார். வளர்ந்து வரும் திண்டுக்கல் நகரின் குடி தண்ணீர் தேவைக்காக தற்போது சுமார் ரூபாய் 700 கோடி மதிப்பில் வைகை அணையிலிருந்து குழாய் மூலம் குடி தண்ணீர் கொண்டுவரப்பட்டு நிலக்கோட்டை, ஆத்தூர், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் ஆகிய தொகுதிகளுக்கும் குடி தண்ணீர் விநியோகம் செய்ய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தேர்தல் முடிந்த பின்பு ஒரு மாத காலத்தில் அதற்கான பணிகள் தொடங்கும் என்றார். தமிழக முதல்வர் துணை முதல்வராக இருந்தபோது மகளிருக்கான சுயஉதவிக் குழுக்களை தொடங்கி வைத்தாரோ, அன்றிலிருந்து இன்று வரை பெண்கள் முன்னேற்றங்களுக்கான திட்டங்களைத்தான் செயல்படுத்தி வருகிறார். மகளிர் உரிமைத்தொகை, விடியல் பயணம், காக்கும் கரங்கள், புதுமைப்பெண், போன்ற திட்டங்களை செயல்படுத்திய தமிழக முதல்வர் தேர்தலுக்கு பிறகு அனைத்து மகளிருக்கும் ரூ. 2 ஆயிரம் உரிமைத் தொகை வழங்குவதோடு, ரூ.8 ஆயிரத்திற்கான கூப்பன்களை வழங்கி உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தவுள்ளார். ஆனால், அ.தி.மு.க.வினர் சிவகாசியில் அச்சடித்த போலி காசோலைகளை வழங்கி உங்களை ஏமாற்ற பார்த்தார்கள், நீங்கள் ஏமாறவில்லை. காரணம் திராவிட மாடல் ஆட்சி மூலம் பயனடைந்த உங்களால் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை என்றும் மறக்க முடியாது. இந்த தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார், நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து உங்களுக்கு உதவக்கூடியவர். அதனால் மறக்காமல் நீங்கள் வாக்களிக்க வேண்டிய சின்னம் உதயசூரியன், உதயசூரியன், உதயசூரியன் என்றார்

தருமபுரியில் 5 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணியே வெல்லும்!

மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் பேட்டி!

தருமபுரி, ஏப். 23 - தமிழ்நாட்டில் திராவிட பேரரசர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கூட்டணியின் வெற்றி என்பது உறுதியான ஒன்று, கழகத்தலைவர், முதலமைச்சர் கூறியதை போல் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் இந்த கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும்.

கடந்த 5 ஆண்டுகளில் தி.மு.க. அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களில் பெரும்பான்மையான திட்டங்கள் மகளிர் மற்றும் இளைஞர்களுக்கானது உதாரணமாக மகளிர் உரிமை தொகை, நான் முதல்வன், தமிழ்புதல்வன், விடியல் பயணம் போன்றவை நாட்டின் கடைக்கோடி மகளிர் மற்றும் இளைஞர்களை சென்றடைந்து இருக்கிறது, அது தேர்தல் பரப்புரையின் போது அவர்கள் அளிக்கும் உற்சாக வரவேற்பின் மூலம் நமக்கு தெரிகிறது. மேலும் கடந்த கால தேர்தல்களை விட இந்த தேர்தல் வித்தியாசமானது என்று கழகதலைவர் கூறியது போல திமுகவா? அதிமுகவா? என்கிற தேர்தல் அல்ல இது தமிழ் நாடா? டெல்லியா? என்று பார்க்கிற தேர்தல் என்பதை மக்கள் நன்கு உணர்ந்து இருக்கின்றனர்.

முதல்மைச்சரின் தமிழ்புதல்வன், தாயுமானவன், மக்களை தேடி மருத்துவம், என அனைத்து திட்டங்களாலும் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள யாராவது ஒருவர் நிச்சயம் பயன்படும் வகையில் செயல்படுத்தி உள்ளார். இதனால் அனைத்து தரப்பு மக்களும் மீண்டும் கழகதலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசே ஆட்சியமைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

கழகதலைவர் கூறியதை போல தேர்தல் களத்தில் திமுகவின் தேர்தல் அறிக்கை சூப்பர்ஸ்டார் தான், முதலமைச்சர் சொன்னால் நிச்சயம் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கை நாட்டு மக்களிடையே இருக்கிறது, இல்லத்தரசி திட்டம் மூலம் வழங்க இருக்கிற ரூ.8000 கூப்பன், மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 ஆக உயர்த்தி தருவது, 5 லட்சம் கலைஞர் கனவு இல்லம் போன்ற திட்டங்கள் கடந்த முறை திமுகவிற்கு வாக்களிக்காத மக்களையும் இம்முறை திமுக மற்றும் அதன் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க தயாராக்கி உள்ளது. மகளிர் உரிமைத்தொகையை செயல்படுத்த முடியாது என்று எள்ளி நகையாடிய அதிமுகவும், பாஜகவும் இன்று தங்கள் தேர்தல் அறிக்கையில் அதனை சேர்க்கின்ற வகையில் நமது தேர்தல் அறிக்கையின் தாக்கம் உள்ளது, இந்திய துணைக்கண்டமே பின்பற்றும் வகையிலான தேர்தல் அறிக்கையை தான் திமுக அளித்துள்ளது.

எனவே தருமபுரி மாவட்டத்தின் தருமபுரி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பென்னகரம், பாலக்கோடு ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளிலும் நிச்சயம் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெறுவது உறுதி.

தருமபுரி மாவட்டத்தை பொறுத்தவரை மணியம்பாடியில் கலைஞர் பல்கலைக் கழகம், மாணவர்கள் பயன் பெற அறிவு சார் மையம், படித்த இளைஞர்கள் பயன் பெற சிப்காட் தொழில் மையம், புவிசார் வர்த்தக மையம், விளையாட்டு துறையில் மினி ஸ்டேடியம் உள்ளிட்ட பல மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவும் திட்டங்கள் செயல்படுத்தப் படும், மேலும் ஏற்கனவே ரூ.36.15 கோடி மதிப்பில் துவங்கப்பட்டுள்ள வெண்ணாம்பட்டி ரயில்வே மேம்பாலம், ரூ.82.15 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டங்கள் விரைந்து முடிக்கப் பட்டு பயன்பாட்டிற்கு வரும்.

தென்மாநிலங்களின் குரலை ஒடுக்க ஒன்றிய அரசு கொண்டு வந்த வஞ்சக தொகுதி வரையறை சட்டத்தை கழகதலைவர் மாண்புமிகு முதலமைச்சர் துணிவுடன் எதிர்த்து தமிழ் நாட்டின் குரலை வலுவாக பதிவு செய்து அந்த சட்டத்தை தோற்கடித்துள்ளார். தமிழ்நாடு தேர்தலில் தி.மு.க. வெற்றியின் முன்னோட்டமாகவே இந்த வெற்றி கிடைத்துள்ளது.

இந்தியாவிலேயே வேலைக்கு செல்லும் பெண்கள் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு தொடர, படித்த இளைஞர்கள் வேலை தேடி வெளியூருக்கு செல்லாமல் அவரவர் பகுதிகளிலேயே வேலை வாய்ப்பை பெற, விளையாட்டு துறையில் பல்வேறு இளம் திறமையாளர்களை அடையாளம் கண்டு அவர்கள் சாதிக்க, இது போன்ற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள் தொடர மக்கள் திமுகவிற்கு வாக்களிக்க தயாராக உள்ளனர்.

எனவே மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதை போல் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் நிச்சயம் திமுக கூட்டணி வெற்றி பெறும் என்று பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி வெற்றி வேட்பாளர், திமுக மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தெரிவித்தார்.

திருமயம் தொகுதி மக்களுக்கு எனது சொந்த செலவில் நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, ஏப். 23 - திருமயம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களுடன் கூறியதாவது:

தேர்தல் களத்தில் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான திமுக ஆட்சிக்கு மிகப்பெரிய வரவேற்பு உள்ளது. நண்பர்கள் அனுபவசாலிகள் சிலர் என்னிடம் கூறிய போது சென்னை முதல் கன்னியாகுமரி வரை பயணம் செய்தோம். திராவிடம் ஆனால் ஆட்சிக்கு எதிரான அலை எந்த இடத்திலும் இல்லை மாறாக ஆதரவலை மட்டுமே உள்ளது என்று கூறினார். இந்த நிலை இருந்தாலே மிகப்பெரிய வெற்றியாக அமையும். இன்றைக்கு மகளிரை காக்கும் கவசமாக தளபதி அவர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள். தளபதி அவர்களை எந்த அம்புகளோ ஈட்டிகளையோ வீசினாலும் மகளிர் என்ற கவசத்தை தாண்டி செல்வது என்பது செல்ல முடியாத காரியம்.

அதே போல் பெண்கள் வாக்குகள் மிகப்பெரிய அளவில் ஆதரவாக இருக்கிறது.

70 முதல் 75 சதவீதம் வரை மகளிர் ஆதரவு இருப்பதால் கள நிலவரம் நன்றாக இருக்கிறது. தலைங மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களை நாங்கள் போவதற்கு முன்பாகவே மக்கள் சொல்லிவிடுகிறார்கள். திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களினால் பயன்அடையாத குடும்பமே கிடையாது. எந்த கட்சியாக இருந்தாலும் எந்த இயக்கமாக இருந்தாலும், அவர்கள் அனைவரும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களினால் பயன் அடைந்த வர்களாக இருக்கின்றனர். இது எங்களுக்கு மிகப் பெரிய வெற்றியைத் தரும்.

தி.மு.க. தேர்தல் அறிக்கை கதாநாயகன் மட்டுமல்ல கதாநாயகியும் கூட என தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மகளிர் உரிமைத் தொகை 2000 ரூபாயாக உயர்த்தப்படும் தமிழ் புதல்வன் புதுமைப் பெண் திட்டத்தில் 1500 ரூபாயாக வழங்கப்படும். எட்டாம் வகுப்பு வரை காலை உணவு திட்டம் விரிவாக்கம் என பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இவற்றையெல்லாம் விட பெரிய வயவேற்பினை பெற்றிருப்பது ஸ்டாலின் கூப்பன் என்கிற கூப்பன் 8000 ரூபாய்க்கு வழங்கப்பட்டு அவர்களுக்கு விருப்பமான பொருட்களை பெற்றுக் கொள்ளலாம் என்பது தான்.

திருமயம் தொகுதியில் நலத்திட்டப் பணிகள் நிறைய நிறைவேற்றி உள்ளேன். மீண்டும் வெற்றி பெற்றதும் இன்னும் அதிகமான திட்டங்களை நிறைவேற்றுவோம். ரூ. 25 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை எங்கள் அறக்கட்டளையிலிருந்து திருமயம் தொகுதியில் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு 150 முதல் 200 பேர் வரை உதவி தொகை வழங்கப்படும். திருமண உதவித்தொகை 25 ஆயிரம் வழங்கப்படும். முதியோர் விடுதி கட்டி அரசிடம் ஒப்படைக்கப்படும். மாணவியர் கல்வி பயிலும் வழியில் மாணவர் விடுதி கட்டி அரசிடம் ஒப்படைத்து பயன்படுத்த செய்யப்படும். பொன்னமராவதி காரையூர் அரிமளம் பகுதியில் மாணவியர் விடுதி அமைத்து தரப்படும் இவ்வாறு அவர் கூறினார்.

5 நாட்களுக்கு வெப்ப அலை:

தமிழ்நாட்டில் இன்று முதல் 26-ஆம் தேதி வரை நீடிக்கும்!

இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

புதுடெல்லி, ஏப்.23- வடமேற்கு, மத்திய மற்றும் கிழக்கு இந்தியாவின் முக்கிய பகுதிகளில் அடுத்த நான்கு முதல் ஐந்து நாட்களுக்கு வெப்ப அலை நிலவக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பஞ்சாப், ஹரியாணா, சண்டிகர் மற்றும் டெல்லியின் சில பகுதிகளில் ஏப்ரல் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் வெப்ப அலை நிலவ வாய்ப்புள்ளது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மேற்கு உத்தரப் பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 25 வரையிலும், கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் ஏப்ரல் 22 முதல் 26 வரையிலும், ராஜஸ்தானில் ஏப்ரல் 24 முதல் 26 வரையிலும், மத்தியப் பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 26 வரையிலும், விதர்பா மற்றும் சத்தீஸ்கரில் ஏப்ரல் 24 முதல் 27 வரையிலும், மேற்கு வங்கம், பிஹார் மற்றும் ஜார்க்கண்டில் ஏப்ரல் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளிலும் வெப்ப அலை நிலவக் கூடும்.

ஒடிசா, கடலோர ஆந்திரப் பிரதேசம், ஏனாம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹே, கடலோர கர்நாடகா மற்றும் குஜராத்தின் கடலோரப் பகுதிகளின் ஆங்காங்கே உள்ள சில இடங்களில் ஏப்ரல் 22 முதல் ஏப்ரல் 25 வரையிலான கால கட்டத்தில் வெப்பமான வானிலை நிலவக்கூடும்.

இந்தக் காலகட்டத்தில், ஹரியாணா, சண்டிகர், டெல்லி, ஒடிசா, கொங்கண் மற்றும் கோவாவில் இரவுகளிலும் வெப்பமான வானிலை இருக்கக் கூடும்.

இதற்கிடையில், வடகிழக்கு மற்றும் கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளில், இந்த வாரத்தில் இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

'தமிழகத்தின் உள் மாவட்டங்களில் இன்று முதல் 26ம் தேதி வரை அதிகபட்ச வெப்ப நிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக் கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்ப நிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்' என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5 கோடியே 73 இலட்சம் வாக்காளர்கள்!

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - இன்று வாக்குப் பதிவு!

காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகின்றது!

சென்னை, ஏப். 23 - தமிழ்நாட்டில் இன்று ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடைபெறுகிறது. மொத்தமுள்ள 234 தொகுதிகளில் நான்காயிரத்து 23 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இன்று (23.04.2026) காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது.

மொத்தமுள்ள 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடி மையங்களுக்கும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டுள்ளன. தேர்தல் பணியில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், காவலர்கள் என 4 லட்சத்து 25 ஆயிரம் பேர் ஈடுபட உள்ளனர். 350 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் 32 ஆயிரம் பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

பதற்றமான வாக்குச் சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 2 கோடியே 80 லட்சம் ஆண் வாக்காளர்கள் மற்றும் 2 கோடியே 93 லட்சம் பெண் வாக்காளர்கள் என மாநிலம் முழுவதும் மொத்தமாக 5 கோடியே 73 லட்சம் பேர் வாக்களிக்க உள்ளனர். இன்று பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி வாக்கு எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளது.

சட்டமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், தெரிவித்துள்ளார்.

சமூக நீதி அடிப்படையிலான வளர்ச்சி, சமத்துவ நோக்கம் கொண்ட வளம் நிறைந்த எதிர்காலம்

இரண்டுக்கும் உத்தரவாதம் ஸ்டாலின்; ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!